இக்குவாரியை சுற்றி 10 கி.மீட்டர் தூரத்தில் எந்தவொரு புராதான சின்னமும் இல்லை என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், ஆனால் சுமார் 5 கி.மீட்டர் தொலைவில் இந்திய தொல்லியல்துறைக்கு உட்பட்ட ஐவர்மலை மற்றும் சமணபடுகை அமைந்துள்ளது என்றும், ஏற்கனவே இங்குள்ள கிராமங்களை சுற்றி 4 குவாரிகள் செயல்பட்டு முடிவுற்றதாகவும் மேலும் 2 கல்குவாரிகள் அமைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது எனவும் ஒரு தாயின் கருவை வெளியில் எடுப்பதற்கு சமமான ஒரு செயல் இது எனவும், நிலத்திற்கு மேல் உள்ளவற்றை எடுப்பதற்கு நமக்கு உரிமையில்லை எனவும், அவ்வாறு செய்தால் மிகப் பெரிய மாற்றமும், இயற்கை சீற்றம் ஏற்படும் என்றும், நிலத்திற்குள்ளே தோண்டி எடுப்பது எவ்வாறு சாத்தியம் எனவும், இக்குவாரியின் நிறுவனர் கேரள மாநிலத்தை சார்ந்தவர் என்றும், கேரளாவில் இருந்து ஒருபிடி மண்ணோ கல்லோ தமிழ்நாட்டிற்கு எடுத்து வர முடியாது எனவும், இங்குள்ள செம்மண், கிராவல், கல்குவாரி, கிரசர், எம்.சாண்ட் அதனுடைய ஒப்பந்த உரிமையை பெற்று கேரள மாநிலத்திற்கு தேவையான கட்டுமானப் பொருட்களை தமிழ்நாட்டிலிருந்து எடுத்து செல்கின்றனர் எனவும், கேரள மாநிலத்தில் உள்ள அதிகாரிகளும் மக்களும் அங்குள்ள இயற்கை வளத்தை அப்படியே வரும் சந்ததியினருக்கு கைமாற்றி கொடுக்க நினைக்கின்றனர் என்றும், நாம் நாம் வாழ்ந்தால் போதும் நமது சந்ததியினர் குழிக்குள் விழுந்து சாகின்ற அளவிற்கு இயற்கையை அழிப்பது எந்தவிதத்தில் நியாயம் எனவும், இங்கு எவ்வளவுதான் நவீன தொழில்நுட்பம் வளர்ச்சி அடைந்தாலும், இயற்கை திருப்பி அடித்தால் காப்பாற்ற முடியாது என்பதை சமீபத்தில் சென்னை, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஏற்பட்ட இயற்கை சீற்றங்களே உதாரணம் என்றும், பழனி வட்டத்தில் தொழில் சார்ந்த 72 சேம்பர்கள் இயங்குவதாகவும், சட்ட ரீதியாக தொழில் தொடங்குவற்கு மட்டும் அனுமதிப் பெற்று

அதனை நீட்டிப்பு செய்வதற்கு எவ்வித அனுமதியும் பெறாமல் இயங்குவதாகவும், எரிப்பொருளாக முந்திரிக் கூண்டு, டயர் ஆகியவற்றை பயன்படுத்துவதால் பெரியம்மாப்பட்டி கிராமத்தில் சுமார் 50 நபர்கள் கேன்சர் நோயால் இறந்துவிட்டனர் எனவும் காரணம் மாசு என்றும், கல்குவாரிகள் ஆரம்பத்தில் பசுமைவேலிகள் அமைத்து அரணாக காப்போம் என்று கூறி ஆரம்பிப்பார்கள் எனவும் பழனி சுற்று வட்டாரத்தில் சுமார் 100 இயங்கும் மற்றும் இயக்கமற்ற குவாரிகளில் துறை சார்ந்த அதிகாரிகள் ஆய்வு மேற்கொள்ளும்பொழுதுதான் தெரியும் முடிவுற்ற குவாரிகளில் கம்பிவேலிகள் அமைத்து ஒருநபரை பாதுகாப்பிற்காக பணியமர்த்த வேண்டும், அக்குவாரிகளில் உள்ள நீரை எடுக்கக் கூடாது, யாரும் உள்ளே செல்லக்கூடாது என்ற அனைத்து விதிகளும் மீறப்படுகிறது என்பது எனவும் ஒரு மரம் கூட நடவில்லை என்பதும் தெரிய வரும் என்றும், இக்குவாரிகளில் பயன்படுத்தப்படும் வெடிப்பொருள்களால் ஏற்படும் ஒலிமாசு மற்றும் இக்குவாரி பயன்படுத்தும் கனரக வாகனங்கள் மூலமாக காற்றுமாசு ஏற்படும் எனவும் இது ஒரு மெதுவான விஷம் என்றும் இக்குவாரிக்கு ஆதரவாக பேசும் நபர் வீட்டிலும் திடீரென ஒரு மரணம் ஏற்படும் எனவும் அது எதனால் என்பது அவர்களுக்கே தெரியாது எனவும் இக்குவாரியினால் ஏற்பட்ட தூசியினை சிறிது சிறிதாக சுவாசிப்பது தான் இறப்பை நோக்கி செல்ல காரணம் என்று கூறினார்.

வருவாய் கோட்டாட்சியர் அளித்த புலப்பட சுவடியில் (FMB) ஓடை இருப்பதாகவும் ஆனால் இடைசெருகலில் ஓடை இல்லை என்று குவாரிக்கு ஆதரவாக அறிக்கை அளித்துள்ளது நகைச்சுவையாக உள்ளது எனவும், இக்குவாரி பினாமி பெயரில் குத்தகைக்கு எடுத்து செயல்படப்போவதாக தெரிகிறது என்றும், உரிமையாளர் கேரள மாநிலத்தை சார்ந்தவர் எனவும் இங்குள்ளவர் இக்குவாரியை குத்தகைக்கு எடுத்திருப்பதாகவும் நான்கு அல்லது பத்தாண்டு கழித்து வேறொரு பெயரில் புதிய குவாரி தொடங்க முன்மொழிந்து இங்குள்ள வளங்களை கொள்ளையடித்து மற்ற மாநிலங்களுக்கு சட்ட விரோதமாக எடுத்து செல்வார்கள் எனவும் மனிதனால் மீண்டும் உருவாக்க முடியாத எதையும் அழிக்க தகுதியில்லை எனவும் இருக்கின்ற இயற்கை வளங்களை காக்க இறைவனை வேண்டிக் கொள்கிறேன் எனவும் இக்குவாரிக்கு எந்த அனுமதியும் வழங்கக் கூடாது என தனது அமைப்பின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன் என்று கூறினார்.

<u>6. திரு. குணசேகரன் – கொலுமண்கொண்டான் கிராமம்</u>

இக்குவாரியின் அருகில் தனது தோட்டம் உள்ளது எனவும், கடந்த 15 வருடமாக இக்குவாரி எவ்வித பாதுகாப்புமின்றி இயங்கி வருவதாகவும், இப்பகுதியில் தோப்பு, கொள்ளு, சோளம் மற்றும் பட்டுப்பூச்சி போன்ற எந்தவொரு பயிரிலும் மகசூல் பெற முடியவில்லை

எனவும், இதனை முன்பு இருந்த குவாரி உரிமையாளரிடமும், இப்போது உள்ள உரிமையாளரிடமும், புதுக்கோட்டையார் சமூகத்திடமும் பலமுறை தெரிவித்தும் எவ்வித பயனும் இல்லை எனவும், இக்குவாரியின் உற்பத்தி மற்றும் விற்பனையில் மட்டுமே கவனம் செலுத்துகின்றனர் எனவும், இக்குவாரிக்கு மீண்டும் நீட்டிப்பு வழங்கினால் தங்களது வாழ்வாதாரம் பாதிப்படையும் எனவும், இக்குவாரியினால் கால்நடை வளர்ப்பு பாதிப்படையும் எனவும் தென்னந்தோப்பில் காய்கள் காப்பதில்லை எனவும், பட்டுப்புழுக்கள் இலைகளில் துகள்கள் படிந்திருப்பதால் அந்த இலைகளை உண்பதில்லை எனவும், தான் 15 லட்சம் ரூபாய் முதலீடு செய்து கடந்த 2 ஆண்டுகளாக எவ்வித பணியும் செய்ய முடியவில்லை என்றும், மேலும் இக்குவாரிக்கு நீட்டிப்பு வழங்கக் கூடாது என்று இக்கிராம மக்கள் சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன் என்று கூறினார்.

7. திரு. குமாரசாமி – கொலுமண்கொண்டான் கிராமம்

இக்குவாரியின் அருகில் தனது தோட்டம் உள்ளது எனவும், கடந்த 15 வருடமாக முன்பு இக்குவாரி அமைப்பதற்கு தனது காட்டை தெரியாமல் அளித்துவிட்டதாகவும், அதனால் தற்போது தாங்கள் அனுபவிக்கும் வேதனை இப்பகுதியை சுற்றியுள்ள ஊர் மக்கள் மற்றும் தோட்டக்காரர்களும் படாதபாடு படுவதாகவும், எதற்காக அந்த காட்டை கொடுத்தோம் என்றும் கண்ணில் கண்ணீர் வராத அளவிற்கு உணர்கிறேன் எனவும், தான் படித்ததினால் வெளியூர் சென்று வேலை பார்த்து சம்பாதிக்கிறேன் என்றும், தனது தோட்டத்திற்கு செல்லும் சாலை மற்றும் அக்குவாரியை சுற்றியுள்ள பகுதியில் அரசினால் பரிந்துரைக்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் எதுவும் கடைப்பிடிக்கவில்லை எனவும், அரசு அதிகாரிகள் சித்தரை மற்றும் ஆடி மாதங்களில் நேரடியாக வந்து ஒரு மணி நேரம் மட்டும் அவ்விடத்தில் நின்று ஆய்வு செய்தால் என்ன பாதிப்பு ஏற்படும் என்று தெரியும் எனவும், இதற்கு முன்னர் தான் ஒரு குவாரி தொடர்பாக புகார் அளித்ததாகவும், அக்குவாரிக்கும் ஊருக்கும் இடையில் 500 மீட்டருக்கும் குறைவாகத்தாகத்தான் உள்ளது, ஆனால் அரசு அதிகாரிகள் 4 கி.மீட்டர் தூரம் உள்ளதாக அறிக்கையில் தெரிவித்துள்ளனர் என்றும், அக்குவாரி உரிமையாளருக்கு ஆதரவாக அறிக்கை அளிக்க வேண்டும் என்பதற்காக அர்த்தமற்ற அறிக்கையை வழங்கியுள்ளனர் என்றும், அக்குவாரியை சுற்றியுள்ள பகுதியில் அரசினால் பரிந்துரைக்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் எதுவும் முறையாக கடைப்பிடிக்கவில்லை எனவும், இக்குவாரிக்கு அரசு நிர்ணயித்து வழங்கிய நிலத்தைவிட அருகில் உள்ள காலி இடங்களையும் ஆக்கிரமிப்பு செய்து பயன்படுத்துகின்றனர் எனவும், அரசு அதிகாரிகள் இதனை ஆய்வு செய்ய வேண்டும் எனவும், குவாரியிலிருந்து கனரக

வாகனங்கள் வெளியே வரும் சமயத்தில் அச்சாலையில் இருசக்கர வாகனத்தில் செல்லும்பொழுது கீழே தவறி விழும் அபாயம் உள்ளது எனவும், அவ்வாறு விழுந்தால் பாதிக்கப்படுவது தாங்களும் தங்கள் குடும்பம் மற்றும் கிராம மக்கள் தான் என்றும், ஆடி மாதத்தில் இங்குள்ள அரசு அதிகாரிகள் யாரேனும் ஒருவர் வந்து குவாரியின் அருகில் ஒரு மணி நேரம் நின்று அங்கு எந்த வேகத்தில் காற்று வீசுகிறது எனவும், அங்குள்ள புகைப்போக்கிகள் எவ்வாறு செயல்படுகிறது என்றும் ஆய்வு மேற்கொண்டு, அதன்பிறகு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

8. பெயர் குறிப்பிடவில்லை

இப்பகுதியைச் சுற்றி ஏற்கனவே 4, 5 கல்குவாரிகள் இருப்பதாகவும், அக்குவாரிகளில் அடிப்படையான பாதுகாப்பு வசதிகள் ஏதுமின்றி செயல்படுகின்றன எனவும், அக்குவாரிகளில் பசுமை வளையம், மரம் வளர்த்தல் மற்றும் குறிப்பிட்ட இடைவெளிகளில் அந்த குவாரிகள் இல்லை எனவும் அனுமதி பெற்று தான் இயங்குகின்றனவா என்பது கூட தெரியவில்லை எனவும், அப்பகுதியை சுற்றியுள்ள புல், தண்ணீரில் மண் படிந்திருப்பதினால் ஆடு, மாடுகள் எவ்வாறு இந்த புல் மற்றும் தண்ணீரை சாப்பிடும் எனவும், அருகில் உள்ள மக்கள் எப்படி வசிப்பது எனவும், வெளி மாநிலங்களில் இருந்து ஒரு கோடி பேர் இங்கு வேலை தேடி வந்து வேலை செய்து வருகின்றனர் எனவும், இங்கு வேலைவாய்ப்பே இல்லாதது போலவும், இக்குவாரி அமைந்தால் தான் வேலைவாய்ப்பு உருவாகும் என்பதுபோல் கூறுகின்றனர் எனவும், இது அடிப்படை தவறு என்றும், மேலும் பாலாறு, பொருந்தலாறு தண்ணீர் 300, 400 மீட்டர் தொலைவில் உள்ளது எனவும், குவாரியில் 120, 130 அடிதான் வெட்டி எடுப்போம் என்று சொல்வார்கள் எனவும், ஆனால் அருகில் சென்று பார்த்தால் தான் தெரியும் வெளியில் உள்ள நீர் அனைத்தும் அக்குவாரிக்குள் செல்கிறது என்றும், இவ்வாறு சென்றால் விவசாயம் எப்படி செய்வது எனவும், இப்படி பல்வேறு பாதுகாப்பு அம்சங்கள் இல்லாமலும் சட்ட விதிகளுக்கு மாறாகவும் குவாரிகள் இப்பொழுதும் இயங்கிக் கொண்டிருக்கிறது எனவும், தமிழ்நாட்டில் உள்ள சட்ட விதிகளுக்கு மீறி இயங்கும் குவாரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் அப்பொழுதுதான் அக்குவாரிகளை ஒழுங்குபடுத்த முடியும் என்றும், கல்குவாரிகள் மனிதசக்திக்கு தேவைதான், ஆனால் சட்ட விதிகளுக்கு மீறி மனிதனுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய இடங்களில் தேவையில்லை என்று கூறினார்.

9. திருமதி. அங்காள ஈஸ்வரி – மிடாப்பாடி கிராமம்

இப்பகுதியில் மழையில்லாத காரணத்தால் விவசாயம் பாதியளவிற்கு குறைந்து விட்டது எனவும், இங்குள்ள விவசாய நிலங்களில் கல்குவாரிகள் அமைக்கவில்லை எனவும், பாறைகள் உள்ள பகுதியில் மட்டுமே குவாரிகள் அமைக்கப்பட்டுள்ளது என்றும், இக்குவாரியினால் தான் எல்லோருக்கும் ஜல்லி மற்றும் எம்.சாண்ட் கிடைக்கிறது என்றும் கூறினார்.

10. திரு.முகிலன், சமூக ஆர்வலர் – கரூர்.

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், கொலுமண்கொண்டான் தி/ள். டி. குமரேஷ் ரஃப் ஸ்டோன் & கிராவல் குவாரி அமைப்பதற்கான கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு தலைமையேற்று நடத்தும் மதிப்பிற்குரிய திண்டுக்கல் மாவட்ட வருவாய்த்துறை அலுவலர் அவர்களுக்கும் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும் இதர அரசு அதிகாரிகளுக்கும், இம்மண்ணின் மீது தீரா காதலோடும், தீரா அக்கறையோடும், இந்த மண் எப்படியெல்லாம் அழிக்கப்படுகிறது எவ்வாறு அழிவிலிருந்து காப்பாற்றுவது என்ற அக்கறையோடு கருத்து சொல்ல வந்துள்ள சமூக உணர்வுள்ளவர்களுக்கும், கிராமத்தை சேர்ந்தவர்களுக்கும், சுற்றுப்புறத்தைச் சேர்ந்தவர்களுக்கும், கேரளவைச் சார்ந்தவர்களின் இடமாக இருந்தாலும்கூட ஆதி புளு மெட்டல்ஸ் என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் உள்ளூர் நபரின் பெயரில் குத்தகைக்கு எடுத்து தி/ள். டி. குமரேஷ் ரஃப் ஸ்டோன் & கிராவல் குவாரி என்ற பெயரில் கல்குவாரி நடத்தவிருக்கும் கல்குவாரி உரிமையாளருக்கும் கல்குவாரி உரிமையாளரால் அழைத்து வரப்பட்டவர்களுக்கும் மற்றும் அனைத்து தரப்பினருக்கும் தாங்கள் சார்ந்திருக்கின்ற தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பாக தனது வணக்கத்தை கூறி தனது கருத்தை பதிவு செய்து, தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தான் கிரானைட் தொடர்பான மதுரை மாவட்ட நீதிமன்ற உத்தரவின் பெயரில் கிரானைட் குவாரிகளை ஆய்வு செய்வதற்காக நியமித்த மதிப்பீட்டு குழுவின் தலைவர் மதிப்பிற்குரிய சகாயம் அவர்களுடன் ஓராண்டு காலம் ஒன்றிணைந்து ஆய்வறிக்கை செய்ய பணியாற்றியவன் என்றும், கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு சட்டவிரோதமாக நடத்தப்பட்ட கல்குவாரி உரிமையாளர் மீது முறையிட்டதனால் உரிமையாளரால் லாரி ஏற்றி கொலை செய்யப்பட்ட கரூர் மாவட்டத்தை சேர்ந்த விவசாயி ஜெகநாதனுக்கு இந்த நேரத்தில் வீரவணக்கம் தெரிவித்துக்கொள்கிறேன் என்றும், இப்பகுதியைச் சுற்றி பாலாறு, பொருந்தலாறு ஆற்றின் வாய்க்கால், ஓடை இக்குவாரியைச்

சுற்றி ஓடுகிறது எனவும், மேலும் இப்பகுதியில் குதிரையாறு, பூலாறு, பொருந்தலாறு அணைகள் உள்ளன என்றும், அமராவதி ஆற்றில் கலக்கக்கூடிய நதியின் குறுக்கே தடுப்பணைக் கட்டி பாசனத்திற்கு பயன்படுத்தும் பகுதி இந்த குவாரி அமையக்கூடியப் பகுதி எனவும், இக்குவாரியைச் சுற்றியுள்ள பகுதி முழுக்க முழுக்க நஞ்சை விவசாயம் செய்யக்கூடியப் பகுதி எனவும், இந்தகருத்துக் கேட்புக்கூட்டம் முன்பெல்லாம் இவ்வாறு நடத்தப்படவில்லை எனவும் இப்பொழுது ஏன் நடத்தப்படுகின்றது என்றால், கடந்த 2018–ம் ஆண்டு தேசிய பசுமைத்தீர்ப்பாயம் 5 ஹெக்டேர் பரப்பளவிற்குள் 12 ஏக்கர் பரப்பளவில் 500 மீட்டர் சுற்றளவில் அமைக்க இருக்கும் கல்குவாரியோ, கிரானைட் குவாரியோ இருந்தால் இந்தகருத்துக் கேட்புக்கூட்டம் நடத்தப்படவேண்டும் என்ற உத்தரவின்படி அடிப்படையில் இக்கல்குவாரியைச் சுற்றி 5 கல்குவாரிகள் ஏற்கனவே இருப்பதாலும், 6 ஏக்கர் பரப்பளவில் இக்கல்குவாரி அமையவிருப்பதால் இக்கருத்துக்கேட்புக் கூட்டம் நடைபெறுகிறது என்றும், மேலும் மேடையில் அமர்ந்திருக்கும் அதிகாரிகள் யாரும் இக்குவாரித் தொடர்பான எந்தவொரு முடிவையும் எடுக்க முடியாது எனவும், இக்கூட்டத்தில் நடைபெறுகின்ற நிகழ்வுகளை காணொளி பதிவாகவும், அறிக்கையாகவும் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைப்பார்கள் எனவும், இக்குவாரி அனுமதி தொடர்பான முடிவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் தான் இறுதி செய்யும் என்றும், மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தவர்களில் எத்தனைபேர் ஆதரவு தெரிவித்தார்கள் எத்தனைபேர் எதிர்ப்பு தெரிவித்தார்கள் என்பதை பொருத்து அனுமதி அளிப்பதில்லை என்றும், இக்குவாரி இங்கு அமைந்தால் சுற்றுச்சூழல் மாசுபடுத்தப்படும், நீர்மாசுபடுத்தப்படும், மண்மாசுபடுத்தப்படும், ஒலிமாசுபடுத்தப்படும் என்றும் மனிதர்கள் மட்டுமல்ல சுற்றியிருக்கும் பறவைகள், விலங்குகள் அனைத்தும் பாதிக்கப்படும் எனவும் சமூக பொருளாதாரச் சூழல் பாதிக்கப்படும் இதனை எப்படியெல்லாம் சரி செய்யப்போகிறோம் என்று இந்த 400 பக்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், சிறு கனிம வணிக விதி 1929–ம் ஆண்டு 36(1)–ன் அடிப்படையில் குவாரிக்கு 300 மீட்டர் சுற்றளவில் குடியிருப்புபகுதி இருந்தால் அனுமதி வழங்கக்கூடாது என இருக்கிறது எனவும், VAO 14.06.2021 தேதியிட்ட சான்றிதழில் 300 மீட்டர் தூரத்திற்குள் எந்தவொரு குடியிருப்பு பகுதி, பள்ளிகள், புராதான சின்னங்கள், உயர் மின் கோபுரம், குடிநீர் ஆதாரங்கள், பறவைகள், வனவிலங்குகள் சரணாலயம் ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், VAO அளித்த முற்றிலும் தவறானது எனவும், குவாரி உரிமையாளரால் வழங்கப்பட்டுள்ள 1பி அறிக்கையில் குவாரிக்கு

300 மீட்டர் தொலைவில் 4 வீடுகள் உள்ளது எனவும், இக்குவாரியின் கூகுள் எர்த் ஃபிளோ செயலியின் வரைபடத்தில் குவாரியின் வெளிப்புலம் அட்சரேகை தீர்க்கரேகையின்படி தென்புலப் பகுதியில் 100 மீட்டர் தொலைவில் வீடுகளும், கிழக்குபுலப் பகுதியில் 295 மீட்டரில் வீடுகளும், கிழக்குப் பகுதியில் 227 மீட்டரில் வீடுகளும், வடகிழக்குப் பகுதியில் 159 மீட்டரில் வீடுகளும் உள்ளன என்றும் VAO அளித்த அறிக்கை முற்றிலும் தவறானது என்று கூறினார்.

தமிழ்நாட்டின் சட்டத்துறை அமைச்சர் உயர்திரு. ரகுபதி அவர்களின் சொந்த ஊரான புதுக்கோட்டை மாவட்டம், லட்சுமிபுரம் பகுதியில் 300 மீட்டர் தொலைவில் வீடுகள் இருந்ததால் இயங்கிக்கொண்டிருந்த 2 குவாரிகள் நீதிமன்ற உத்தரவின்படி மூடப்பட்டுள்ளது என்றும், கரூர் மாவட்டத்தில் பொய்யான அறிக்கை அளித்த VAO மீது கிரிமினல் வழக்கு பதியப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும், அதேபோல் இக்கிராமத்தில் பணியாற்றிய முன்னாள் VAO மீது வழக்கு பதிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், ஈரோடு மாவட்டத்திலும் இதேபோல் அறிக்கை அளித்த துணை வட்டாட்சியர் மீதும் கிரிமினல் வழக்கு பதியப்பட்டுள்ளது என்றும், இதேபோல் இங்குள்ள VAO மீது கிரிமினல் வழக்கு பதியவேண்டும் எனவும், கேரள மாநிலத்தை சேர்ந்த நில உரிமையாளர் உள்ளூரில் இருப்பவருக்கு குத்தகை அளித்துள்ளார் என்றும், ஏனென்றால் கேரள மாநிலத்தை சார்ந்தவராக இருந்தால் கேள்விகள் கேட்கப்படும் என்றும், உள்ளூரை சேர்ந்தவர் என்றால் கேள்விகள் கேட்கமாட்டார்கள் என்றும், VAO அளித்த அறிக்கையில் உயர் மின் கோபுரங்கள் இல்லை குறிப்பிட்டுள்ளதாகவும், ஆனால் இக்குவாரியைச் சுற்றி கிட்டத்தட்ட 20 மின் காற்றாலைகளும் புல எண். 382-ல் 3 உயர் மின் கோபுரங்கள் உள்ளன என்றும், உயர் மின் கோபுரங்கள் இருக்கும் பகுதியில் குவாரிக்கு அனுமதி வழங்கக்கூடாது என இந்திய மின்சார சட்டம் 1956 விதி 83/2-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், தமிழ்நாடு மின் பகிர்மான கழகம், பல்லடம் செயற்பொறியாளர் அவர்களால் வழங்கப்பட்ட அறிக்கையில் CEA பாதுகாப்பு ஒழுங்குமுறை 2010 பகுதி 7-ல் வகுப்பு 65-ன்படி 300 மீட்டர் இடைவெளியை கடைபிடித்து மின்பாதையில் இடையூறு ஏற்படுத்தா வண்ணம் குவாரிப் பணியை மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், குவாரி அமைப்பதற்கு மொத்தம் 45 ஆவணங்கள் இணைக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும், வெடிமருந்து தொழிற்சாலைக்கு அனைத்து ஆவணங்களும் இருக்கின்றன, ஆனால் குவாரிகளுக்கு மட்டும் நான்கில் ஒருபங்கு ஆவணங்கள்கூட இல்லை எனவும், இது எவ்விதத்தில் நியாயம் என்றும், A1 விளம்பரம், A1 விளம்பரம் பற்றிய பொதுமக்கள் கருத்து, A1

விளம்பரம் பற்றிய VAO அளித்த சான்று, A1 விளம்பரம் RI அளித்த சான்று மற்றும் நிலத்தை பார்வையிட்ட வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியர் அறிக்கை, கனிம வள உதவி இயக்குநரின் அறிக்கை என எதுவும் இல்லை என்றும், தொல்லியல் துறை, வனத்துறை, அறநிலையத்துறை, பொதுப்பணித் துறை, உள்ளாட்சித்துறை போன்ற அனைத்து துறைகளும் வழங்க வேண்டிய இணை முடிவு சான்றிதழ் இணைக்கப்படவில்லை எனவும், தமிழில் ஆவணங்கள் வழங்கியதற்காக கோயம்பத்தூர் மாவட்டத்தில் நடைபெற இருந்த கருத்துக்கேட்புக் கூட்டம் ரத்து செய்யப்பட்டது என்றும், ஆவணங்கள் முறையாக இணைக்கப்படவில்லை என்பதற்கான சிவமலையில் நடைபெற இருந்த கருத்துக்கேட்புக் கூட்டம் மக்கள் நடத்தவிடவில்லை எனவும், அரசு அதிகாரிகள் சட்டப்படி வேலை செய்தால் யாரும் எதையும் கேட்கப்போவதில்லை எனவும், எல்லாமே வெளிப்படையாக இருக்க வேண்டும் எனவும், ஆவணங்கள் வெளிப்படையாக இருப்பதில் என்ன பிரச்சனை என்றும், சட்டத்தின் ஆட்சியை நிலை நிறுத்த வேண்டும் என்றும், அரசு என்பது மக்களை விழிப்புணர்வு செய்வதற்காகவே தவிர ஏமாற்றுவதற்கு அல்ல என்றும், இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களில் கிராம வரைபடம் இல்லை எனவும், கிராம வரைபடம் இருந்திருந்தால் அதில் எத்தனை வீடுகள் உள்ளன, எத்தனை மின் கோபுரங்கள் உள்ளன, எத்தனை ஓடைகள் உள்ளன என்பது தெளிவாக தெரிந்திருக்கும் எனவும், இந்த கிராம வரைபடம் இல்லாத காரணத்தினால் தான் புல வரைப்படம் மற்றும் கூகுள் வரைபடத்தை காண்பிக்க வேண்டிய நெருக்கடியில் தள்ளப்பட்டேன் எனவும், இக்குவாரியைச் சுற்றி கிட்டத்தட்ட 20 காற்றாலைகளும், 3 உயர் மின் கோபுரங்கள் உள்ளதால் இந்த இடத்தில் குவாரி அமைக்க முடியாது அமைக்கக் கூடாது, அமைத்தாலும் சட்டப்படி மக்களுக்கு எடுத்து புரிய வைப்போம் என்றும், ஓடை பற்றிய தவறான அறிக்கையை கோட்டாட்சியர் அளித்ததாக மாவட்ட கனிம வள உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார் எனவும், புலப்பட சுவடியில் ஓடை இருப்பதாகவும், நிலத்தில் ஓடை இல்லை எனவும் கோட்டாட்சியர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், சமீபத்தில் எடுத்த வரைபடத்தில் ஓடையானது குவாரியின் நடுப்பகுதியில் செல்கிறது எனவும், ஓடையை இடம் மாற்றி அமைக்கலாம் என எந்த சட்டத்தில், சட்டப்பிரிவில் தெரிவித்திருக்கிறது எனவும், இன்றைக்கு சென்னை, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள் ஏன் மிதக்கின்றன எனவும், எல்லாம் இதுபோன்ற அறிக்கையினால் தான் எனவும், நில வருவாய் ஆணையர் அவர்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பட்டாநிலத்தில் உள்ள ஓடை அரசின் சொத்து எனவும், அந்த ஓடையின் மீது பாதை அமைக்கவோ, ஓடையின் தடத்தை மாற்றி அமைக்கவோ

அந்நில உரிமையாளருக்கு எவ்வித அனுமதியும் இல்லை என்று தகவல் அளித்துள்ளார் எனவும், இதற்கு முன் இருந்த கோட்டாட்சியர் எந்த சட்டத்தின் அடிப்படையில் தவறான உத்தரவை அளித்தார் எனவும், அதிகாரிகள் சட்டத்தை பின்பற்ற வேண்டும் எனவும், யாரோ ஒருவர் கேரளாவிலிருந்து வந்து மண் அள்ளுவதற்கு துணையாக இருந்தால் இந்த நாடு எப்படி விளங்கும் என்றும், தாங்கள் தவறு செய்தால் தட்டி கேட்பதற்கு காவல்துறை வருவாய்த்துறை மற்றும் மாசு கட்டுப்பாடு வாரியம் இதர 52 துறைகள் உள்ளன என்றும், ஆனால் தவறை சுட்டிக்காட்ட வேண்டிய அதிகாரிகளே குற்றவாளிக் கூண்டில் இருந்தால் தாங்கள் எங்குபோய் பேசுவோம் எனவும், கேரளாவில் 32 ஆண்டுகளுக்கு மேல் ஒரு கைப்பிடி மண் கூட அள்ளமுடியாது என்றும், தமிழ்நாட்டில் 33 ஆறுகளும், கேரளாவில் 48 ஆறுகளும் உள்ளன என்றும், தமிழ்நாட்டில் 9000 குவாரிகளும், கேரளாவில் 30 குவாரிகளும் உள்ளன என்றும், நமக்கு இருக்கின்ற மேற்குத் தொடர்ச்சி மலை மற்றும் ஆறும் அவர்களுக்கும் இருக்கிறது, ஆனால் அங்கிருந்து வந்து வயலூருக்கு அருகிலுள்ள கொலுமண்கொண்டான் பகுதியில் குவாரி மற்றும் எம் சாண்ட் அமைத்து அவர்களுக்கு தேவையான கல் மற்றும் எம் சாண்ட்களை கேரளாவிற்கு எடுத்து செல்கின்றனர் என்றும், இது என்ன நியாயம் எனவும், மனச்சாட்சி வேண்டாமா எனவும், அதிகாரிகள் ஓடையில் மாற்றம் செய்தது தவறு எனவும், குவாரியின் மையப்பகுதியில் ஓடை செல்வதால் **தி/ள்.டி.குமரேஷ் ரஃப் ஸ்டோன் & கிராவல் குவாரிக்கு** அனுமதி வழங்க முடியாது எனவும், அரசு நிலத்திற்கும் இக்குவாரிக்கும் 10 மீட்டர் இடைவெளி மட்டுமே உள்ளது என திட்ட வடிவமைப்பாளர் அறிக்கையில் உள்ளது 20மீட்டர் வரைக்கும் அரசு நிலம் ஆக்கரமிப்பு செய்யப்பட்டுள்ளது எனவும், அந்த அரசு நிலம் நீர் போக்கு உள்ள பகுதியில் குவாரி அமைத்தால் விவசாயம் எப்படி செய்ய முடியும் எனவும் ஆடு, மாடுகள் எப்படி வளர்ப்பது எனவும், எப்படி பண்ணைத் தொழில் பார்ப்பார்கள் எனவும், இங்கு வழங்கப்பட்டுள்ள அனைத்தும் சட்டத்திற்கு புறம்பானது என்றும், ஜனவரி 15-ம் தேதி முதல் பிப்ரவரி 14-ம் தேதி வரை சாலை பாதுகாப்பு மாதம் எனவும், சாலை பாதுகாப்பு என்பது குறிப்பிட்ட எடை மட்டுமே வாகனங்களில் ஏற்றி செல்ல வேண்டும் எனவும், மீறும்பட்சத்தில் அபராதம் விதிக்கப்படும் என்றும் உதாரணமாக கிராமப்பகுதிகளில் திருமண வீட்டிற்குச் செல்லும்போது குட்டியானை வாகனத்தில் ஆட்களை ஏற்றி சென்றால் அபராதம் விதிக்கப்படும். அதேபோல் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது தலைகவசம் அணியவில்லை எனில் 1000 ரூபாய் அபராதமும், மது அருந்தி விட்டு வாகனம் ஓட்டினால் 10000 ரூபாய் அபராதம் விதிக்கப்படும் எனவும், அனைத்து வட்டாரப் போக்குவரத்து

அலுவலகத்தின் முன்னறிவிப்பு பலகையிலும் வாகனங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள எடையைவிட கூடுதலாக ஒரு டன் ஏற்றினால் ரூபாய் 20000 அபராதமும், அதன்பின் இருக்கக்கூடிய ஒவ்வொரு டன்னிற்கும் ரூபாய் 2000 அபராதம் விதிக்கப்படும் எனவும். மேலும் அவ்வாகனத்திலுள்ள பொருட்களை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திலேயே இறக்கி வைக்க வேண்டும். இறக்குவதற்கு உண்டான கட்டணத்தை செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருக்கும் என்றும், மத்திய அமைச்சர் நிதின் கட்கரி வழங்கிய ஆணையின் அடிப்படையில் டிரான்ஸ்போர்ட் ஆணையாளர் 26.07.2023 நாளிட்ட சுற்றறிக்கையில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட கூடுதலாக எடை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் மீது பொதுச் சொத்துக்கு சேதாரம் விளைவித்தல் என்ற பிரிவின் கீழ் வழக்கு தொடர வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், நான்குவழிச் சாலைகளில் 10 டன் வரை மட்டுமே வாகனங்களில் அனுமதிக்கப்படும் எனவும், நம் வரிப் பணத்தில் போடப்படும் சாலைகளில் ஒரு கிலோ மீட்டர் சாலைக்கு ஒரு கோடி செலவாகிறது எனவும் கொலுமண்கொண்டான் கிராமத்திலிருந்து மாவட்ட சாலையை இணைக்கும் சாலையில் 6 சக்கர வாகனங்கள் மட்டுமே செல்ல வேண்டும், ஆனால் 10, 12 மற்றும் 16 சக்கரங்கள் கொண்ட வாகனங்கள் குவாரியிலிருந்து செல்வதால், அச்சாலை தரமற்றதாகவும், மற்ற வாகனங்கள் செல்வதற்கு சிரமமாக உள்ளது எனவும், மத்திய மோட்டார் வாகன விதிகள் ஏதும் இங்கு கடைப்பிடிக்கவில்லை எனவும், கிராமப்புற சாலையில் லாரிகள் சென்றால் உடனே தடுத்து நிறுத்தி அதிகாரிகளுக்கு தெரியபடுத்தினால் ரூபாய் 1. லட்சம் அபராதம் விதிக்கப்படும் எனவும், இதேபோல் கோவை மாவட்டத்தில் 4 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டு அரசுக்கு வருமானம் ஈட்டப்பட்டது என்றும், கொலுமண்கொண்டான் கிராமத்தை சுற்றியுள்ள குவாரி, கிரசர் மற்றும் விவசாயம் சார்ந்தவர்களாய் இருந்தாலும் அதிக எடை ஏற்றிச் செல்லும் வாகனங்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறினார். இங்குள்ள எடை மேடைகள் அனைத்தும் 60, 80 மற்றும் 100 டன் வரை மட்டுமே உள்ளன, ஆனால் இங்கு அதிகபட்சமாக மாநில மற்றும் மத்திய நெடுஞ்சாலைகளில் வாகனங்களுக்கு அனுமதிக்கப்படும் அளவு 45 டன் மட்டுமே ஆகும் எல்லா தவறுகளையும் செய்வதற்கு உண்டான வாய்ப்புகளை உருவாக்கி தருகிறோம் என்றும், நாம் செலுத்தக்கூடிய வரிப்பணத்தில் மாநில மற்றும் மத்திய அரசுகள் சுமார் 20 சதவீதம் சாலை அமைப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது என்றும், இந்த 20 சதவீதம் இருந்தால் நமக்கு ஒரு மருத்துவக் கல்லூரியோ, பொறியியல் கல்லூரியோ, நமக்கு தண்ணீர் வசதி செய்து கொடுத்திருப்பார்கள், ஆனால் கேரளாவில் இருக்கும் முதலாளி வாழ்வதற்கு நம்முடைய

வரிப்பணம் அழிக்கப்படுகிறது எனவும், ஆகவே இதன்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், 10 கி.மீட்டர் சுற்றளவில் தொல்லியியல் சின்னம், வரலாற்றுச் சின்னம் மற்றும் புராதான கோயில்கள் ஏதும் இல்லை என பவர்பாயிண்ட் பிரசண்ட்டேசனில் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், ஆனால் தொல்லியியல் துறைக்கு உட்பட்ட ஐவர்மலை மற்றும் சமணப்படுகை, வரலாற்றுச் சின்னங்கள், கோயில்கள் அனைத்தும் உள்ளன என்றும் இவை அனைத்தும் மறைக்கப்பட்டு பல்வேறு மோசடிகளை அரங்கேற்றியுள்ளது எனவும், கிராமத்தின் தென்கிழக்குப்பகுதியில் குவாரி அமைந்திருப்பதாகவும், ஆனால் இங்கு வழங்கியுள்ள அறிக்கையில் வடக்குப்பகுதியில் குவாரி அமைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், இவ்வரைபடத்தை சென்னையில் அமர்ந்து கொண்டு கண்மூடித்தனமாக வழங்கியிருக்கிறார்கள் எனவும், அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய 3 மாதங்களில் காற்றின் தரம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது எனவும், காற்றின் தரம் மிக அருமையாக உள்ளது என தெரிவிக்கப்பட்டிருக்கிறது எனவும், மண், காற்று, ஒலி ஆகியவற்றை ஆய்வு செய்வதற்கு மின்சாரம் இல்லை எனவும், ஆனால் 5 இடங்களில் காற்றை ஆய்வு செய்து, காற்று எந்த திசையில் அடிக்கிறது, அது எப்படி அடிக்கிறது அதனால் பொதுமக்களுக்கு பாதிப்பு உண்டாகிறதா, விவசாயம் பாதிக்கப்படுகிறதா, பயிர் பச்சை பாதிக்கப்படுகிறதா, ஓணான், கீரி, நண்டு, பாம்பு போன்றவற்றிற்கு பாதிப்பு ஏற்படுகிறதா என ஆய்வு செய்தபொழுது எவ்வித பாதிப்பும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், கேரளா மாநிலத்தில் இருந்து இங்கு உரிமையாளராக இருந்து கொண்டு **தி/ள். டி. குமரேஷ் ரஃப் ஸ்டோன் & கிராவல் குவாரி** குத்தகைக்கு வழங்கியுள்ள தாங்கள் 5 இடங்களில் காற்று ஆய்வு மேற்கொண்டதாக சொல்லப்படும் இடங்களில் பெறப்பட்ட மின் இணைப்பு மற்றும் மின் அளவீடுகளை வழங்குமாறு கேட்டுக்கொண்டார். வழங்குவார்களா? வழங்கமாட்டார்கள், ஏனெனில் இங்கு காற்று ஆய்வு மேற்கொள்ளப்படவே இல்லை எனவும், தாங்கள் ஒவ்வொரு கூட்டத்திலும் கேட்பதாகவும், இக்கூட்டம் தங்களுக்கு 250வது கூட்டம் எனவும், 99 கூட்டத்தில் மின்சார அளவை கேட்டதாகவும், இது 100வது கூட்டத்தில் கேட்பதாகவும் தெரிவித்தார். மேலும், காற்று ஆய்வு மேற்கொள்ளவதற்கு முன்பு இருந்த மின் அளவீடுக்கும் ஆய்வு மேற்கொண்ட பிறகு உள்ள மின் அளவீடுக்கும் உள்ள வேறுபாடை தெரிவிப்பார்களா என்றும் தெரிவிக்கமாட்டார்கள், ஏனென்றால் காற்று ஆய்வு மேற்கொள்ளப்படவே இல்லை, இதிலும் மோசடி உள்ளது எனவும், பெருந்துறையில் சிப்காட் வந்ததால் அனைவருக்கும் கேன்சர் நோய் ஏற்பட்டதாகவும், ஆண்களுக்கும், பெண்களுக்கும் 10ல் 3 நபருக்கு மலட்டுத் தன்மை ஏற்பட்டுள்ளதாகவும், ஒரு குழந்தை

பெற்றெடுக்க வேண்டும் என்றால் சுமார் 40 லட்சம் ரூபாய் செலவு செய்ய வேண்டும் என்றும், வெடி வைக்கும்பொழுது குவாரியிலிருந்து புகை சுமார் 1 மணி நேரம் வெளிவருகிறது எனவும், அப்புகையை சுவாசிப்பதால் இப்பகுதி மக்களுக்கு இக்குவாரியின் பரிசாக சர்க்கரை நோய் கிடைக்கிறது என்றும், குவாரியினால் ஏற்படும் காற்று மாசு இரண்டு பங்கு சர்க்கரை அளவு அதிகமாக உள்ளதாகவும், இதனால் மலட்டுத்தன்மை அதிகம் ஏற்படுகிறது எனவும், இதனால் நமது எதிர்கால தலைமுறை பெரிதும் பாதிப்பு அடையும் எனவும், அதுமட்டுமல்லாது ஆஸ்துமா போன்ற நோய்கள் ஏற்படும் எனவும், குவாரி உரிமையாளர் 5 வருடங்களுக்கு அனுமதி பெற்றுக்கொண்டு 10 வருடங்களுக்கு குவாரி பணியை மேற்கொண்டு, 100 கோடி ரூபாய் சாலையை அழித்து, இங்குள்ள காற்றை மாசுபடுத்தி, நீர் ஆதாரங்களை அழித்து, விவசாயத்தை அழித்து, மக்களுக்கு நோய்களை கொடுத்து விட்டு 5 லட்சம் ரூபாயை கொடுத்து பள்ளிக்கூடத்திற்கு கணிப்பொறி மற்றும் சுற்றுச்சுவர் அமைப்பதற்கும், பள்ளிக்கூட குழந்தைகளுக்கு நவீன பலகை வாங்கிக்கொள்ளலாம் இக்கிராம வளர்ச்சிக்கு செலவு செய்வதாக சொல்கிறார்கள் எனவும், திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த ஆண்டு 3 முறை 1.5 ரிக்டர் அளவில் நில அதிர்வு ஏற்பட்டதாகவும், இன்னும் 2 ரிக்டர் அளவு அதிகம் உணரப்பட்டு இருந்தால் ஊரே காலியாகி இருக்கும் எனவும், பாறை என்பது நமது மூட்டுகள் போல் ஒன்றோடு ஒன்று இணைந்து காணப்படும் எனவும், அவற்றை வெடி வைத்து உடைக்கும் போது பூமியில் பிளவு ஏற்படும் எனவும், குவாரிகள் 40 மீட்டருக்கு அனுமதி வாங்கிக்கொண்டு 60 மீட்டர் வரை பாறைகளை தோண்டி எடுக்கிறார்கள் எனவும், 40 மீட்டர் என்பது கிட்டத்தட்ட 150 அடி எனவும், கிணறுகள் 75 அடி மட்டுமே தோண்டுவார்கள், 150 அடி தோண்டும்போது சுற்றியுள்ள கிணறுகளில் நீர் இருக்காது எனவும், குவாரியை சுற்றி பாலாறு, பொருந்தலாறு கால்வாய்கள் இருக்கின்றன எனவும், கால்வாய் நீரினை விவசாய நிலத்தில் தேக்கி வைத்து விவசாயம் பார்க்க முடியாது எனவும், நீர் அனைத்தும் குவாரிக்கு சென்று விடும் எனவும், 2021 முதல் 2024 வரை திண்டுக்கல் மாவட்டத்தில் 5 முறை நில அதிர்வு ஏற்பட்டதாகவும், இது நில அதிர்வு மாவட்டம் எனவும், நாம் மோசமான சூழ்நிலையில் இருக்கிறோம் என்றும், அருகில் உள்ள திருப்பூர் மாவட்டத்திற்கும் இதே நிலை தான் எனவும், இங்கு வெடிமருந்து தொழிற்சாலை வர இருப்பதாகவும், எங்களுடன் வேட்டையாடிகொண்டிருந்த மனிதன் தான் இப்பொழுது பழனியில் முருகன் கடவுளாக இருக்கிறார் என்று தமிழ்நாட்டினர் அனைவரும் இந்தியா முழுவதும் பெருமையாக சொல்லிக் கொண்டிருக்கின்றோம் என்றும், நாம் இப்படியே பெருமை பேசிக்கொண்டே இருப்போம் எனவும், நமக்கு கீழே

இருக்கக்கூடிய பாறைகளை அதிகமாக வெட்டி அழித்துக்கொண்டு இருக்கிறார்கள் எனவும், அதேபோன்று 6 ஏக்கரில் பசுமை வளையம் அமைப்போம் என்றும், ஒரு ஏக்கருக்கு சுமார் 200 மரங்கள் 6 ஏக்கருக்கு 1200 மரங்கள் நட வேண்டும் என்று அறிக்கையில் இருக்கிறது எனவும், இங்கு சுமார் 6 குவாரிகள் இருக்கின்றன, இக்குவாரிகளில் மொத்தம் 20000 மரங்கள் நட்டு இருக்க வேண்டும், ஆனால் தாங்கள் பார்த்தபொழுது மரங்கள் எதுவும் இல்லை எனவும், சில இடங்களில் பெயருக்கு ஒரு மரத்தை நட்டு அதை துணியால் சுற்றி வைத்துள்ளனர் எனவும், இங்கு வைக்கப்பட வேண்டிய மரங்கள் நாட்டு மரங்களான வேம்பு, ஆலம், அத்தி, பூவரச மற்றும் புங்கை மரங்கள் எனவும், இம்மரங்களுக்கு தொடர்ந்து ஒரு வருடம் நீர் விட்டாலே நன்றாக வளரும் எனவும், ஆனால் இங்கு பசுமை வளையம் ஏதும் அமைக்கப்படவில்லை என்றும், ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது என்பது போலவும், சர்க்கரை என்று காகிதத்தில் எழுதி வைத்தால் இனிக்காது என்பது போல இங்கு பசுமை வளையம் என்பது கானல் தான் என்றும், குவாரியில் வெடி வைப்பதற்கான நேரம் மதியம் 1 மணியிலிருந்து 2 மணி வரை மட்டுமே எனவும், குவாரியின் வேலை நேரம் காலை 7 மணியிலிருந்து மாலை 5 மணி வரை எனவும், சத்தமே இல்லாத வெடிகளைத்தான் பயன்படுத்துவோம் என்றும் கூறுகின்றனர் எனவும், ஆனால் இந்த குவாரி மட்டுமல்லாது அனைத்து குவாரிகளும் சட்டவிரோத வெடி மருந்துகளை பயன்படுத்துகின்றனர் என்றும், காவல்துறை அதிகாரியின் கவனத்திற்கு ஒரேயொரு சமூகத்தை சேர்ந்த நபர் காரில் வெடிகுண்டு வைத்தார் என்பதற்காக தேசிய புலனாய்வு ஆய்வு செய்தார்கள் எனவும், ஆனால் கொலுமண்கொண்டான் கிராமத்தில் அனுமதி முடிவுற்ற 6 குவாரிகள் தற்பொழுதும் இயங்கிக் கொண்டு இருக்கின்றன எனவும், இப்பகுதியில் தொடர்ந்து கனிமக் கொள்ளை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது எனவும், அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும் எனவும், பூமிக்கு அடியில் 3 அடி மட்டுமே நில உரிமையாளருக்கு சொந்தம் எனவும், 3 அடிக்கு கீழ் உள்ள அனைத்தும் அரசிற்கே சொந்தம் எனவும், அதனால் தான் குவாரி உரிமையாளர் என்று சொல்வதில்லை எனவும், குவாரி குத்தகைதாரர் என்று சொல்கிறோம் எனவும், இங்கு 100 கோடி ரூபாய் மதிப்புள்ள கனிம வளங்கள் வெட்டி எடுக்கப்பட்டுள்ளன என்றும், இங்குள்ள அதிகாரிகள் உடனடியாக அனுமதியின்றி செயல்பட்டுக் கொண்டிருக்கும் குவாரிகளை ஆய்வு மேற்கொள்ளுமாறும், அங்குள்ள வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் பறிமுதல் செய்யுமாறும் கேட்டுக்கொள்கிறேன் எனவும், தங்கள் கணக்கின்படி சட்டவிரோதமாக 2000 டன் வெடிப்பொருட்கள் கொலுமண்கொண்டான் கிராமத்திற்கு வந்திருக்கிறது எனவும், 2000 டன் என்பது 200 லாரி

வெடிப்பொருட்கள் ஆகும் எனவும், இதன்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டார் எனவும், தான் அனைத்து உண்மைகளையும் கூறியும் பாதுகாக்கவில்லை என்றால் இந்த நாடு நாசமாகப்போய்விடும் எனவும், கொலுமண்கொண்டான் கிராமத்தில் வெடிமருந்து வைத்து வெடி வெடிப்பதற்கு அனுமதி இல்லை எனவும், அதையும் மீறி வெடிசத்தம் கேட்டால் சட்டவிரோதமாக வெடிப்பொருள் எடுத்து வந்து வெடிக்கிறார்கள் என்று பொருள் என்வும், கொலுமண்கொண்டான் கிராமத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்ற குவாரிகள் அனைத்தும் சட்டவிரோதமானது எனவும், இங்குள்ள அனைவரையும் குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்து நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும், குவாரியின் வேலை நேரம் காலை 7 மணியிலிருந்து மாலை 5 மணி வ்ரை எனவும், 5 மணிக்கு மேல் லோடு கூட வெளியே செல்லக்கூடாது எனவும், இதுவும் சட்டவிரோதமாகத்தான் நடக்கிறது எனவும், தமிழ்நாட்டில் உள்ள குவாரிகளும் கம்பி வேலி அமைக்க வேண்டும் என்று கடந்த 8 வது மாதம் தலைமைச் செயலாளர் திரு. சிவதாஸ் மீனா அவர்களின் மூலம் மாவட்ட ஆட்சியர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டது எனவும், அச்சுற்றறிக்கை மாவட்ட ஆட்சியர் மூலம் பத்திரிக்கை செய்தியாக வெளியிடப்பட்டது என்வும், கடந்த ஆண்டு சுமார் 230 நபர்கள் கல்குவாரியில் விழுந்து இறந்துவிட்டதை கருத்தில் கொண்டு மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் அனைத்து குவாரிகளும் கம்பி வேலி அமைக்க வேண்டும் என்று 28.07.2023 அன்று அறிக்கை வெளியிடப்பட்டது எனவும், செப்டம்பர் இறுதிக்குள் அனைத்து குவாரிகளும் கம்பி வேலி அமைக்க வேண்டும் என உத்தரவு வழங்கப்பட்டது, ஆனால் யாரும் உத்தரவை செயல்படுத்தவில்லை எனவும், குவாரி அமைக்கும்பொழுது 1 மீட்டருக்கு 300 ரூபாய் வீதம் 6 ஏக்கருக்கு செலவு செய்து கம்பி வேலி அமைப்போம் என சொல்கிறார்கள், ஆனால் அவை நடைமுறையில் இல்லை என்றும், கொலுமண்கொண்டான் கிராமத்தில் மட்டுமில்லாமல் நமது மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான குவாரிகளில் நடைமுறையில் இல்லை எனவும், சட்டத்தை போடுகின்ற தாங்கள் அதை அமல்படுத்த வேண்டும் எனவும், அதற்கானத்தான் அதிகாரிகள் இருக்கிறீர்கள் எனவும், அரசாணை எண் 19 ஆண்டு 2022-ன்படி கிராம நிர்வாக அலுவலர் அவரது பொருப்பில் உள்ள 100 சதவீத குவாரிகளையும், ஆணையர் 75 சதவீத குவாரிகளையும், தாசில்தார் 50 சதவீத குவாரிகளையும், வருவாய் கோட்டாட்சியர் 25 சதவீத குவாரிகளையும், மாவட்ட வருவாய் அலுவலர் 10 சதவீத குவாரிகளையும், மாவட்ட ஆட்சியர் 5 சதவீத குவாரிகளையும் ஆய்வு செய்ய வேண்டும் எனவும் குறிப்பிட்டார். மேலும், இந்த அரசாணை நடைமுறையில் இருந்தால் கொலுமண்கொண்டான் கிராமத்தில்

சட்டவிரோதமாக இயங்கும் குவாரிகள் இயங்கிக்கொண்டிருக்க முடியாது எனவும், அரசு அதிகாரிகள் சட்டப்படி செயல்பட வேண்டும் என்றும், பொதுமக்களுக்காகத்தான் அதிகாரிகள் என்றும், குவாரி உரிமையாளருக்கு அதிகாரிகள் இல்லை என்றும் தெரிவித்தார்.

கோட்டாட்சியர் அவர்களிடம் கம்பி வேலி அமைக்காத குவாரிகளின் நடைசீட்டு அனுமதியை ரத்து செய்யுமாறும், காவல்துறை துணை கண்காணிப்பாளரிடம் சட்டவிரோத வெடிமருந்து பயன்பாட்டினை தடுக்குமாறும், அதிக பளு ஏற்றிச் செல்லும் வாகனங்களை பறிமுதல் செய்யுமாறும் கேட்டுக்கொண்டார். சட்டவிரோதமாக வெடிமருந்து பயன்படுத்துவதை தடுப்பது தொடர்பான அரசாணையை அனைத்து தரப்பு அரசு அதிகாரிகளுக்கும் தாங்கள் தான் வழங்கியதாக குறிப்பிட்டார். குவாரியில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு குவாரி உரிமையாளர்கள் ESI, PF மற்றும் காப்பீடு போன்ற வசதிகள் ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் ஆனால் குவாரி உரிமையாளர்கள் யாரும் இதை நடைமுறைப்படுத்துவது இல்லை என்றும், தொழிலாளர் சட்டத்தை நடைமுறைபடுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார். மேலும், இயங்கி முடித்த குவாரிகளில் உள்ள தண்ணீரை அனுமதி இல்லாமல் எவரும் பயன்படுத்தக்கூடாது என்றும், தலைமை செயலரிடம் அனுமதிப் பெற்றபின்னரே அந்த குவாரியுள்ள தண்ணீரை பயன்படுத்த முடியும் என்று குறிப்பிட்டார். குவாரி, கிரசர், எம் சாண்ட் போன்ற தொழிற்சாலைகள் அமைவதற்கு அடிப்படை அளவுகோல்கள் உள்ளன. ஆனால், இதை யாரும் நடைமுறைபடுத்துவது இல்லை எனவும், இதன்மீது நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

மேலும், ஆறுகளிலிருந்து எடுக்கப்படும் மணல் மற்றும் எம் சாண்ட் பி சாண்ட் இவற்றிற்கு மாற்றாக தென்கிழக்கு ஆசியா நாடுகளான இந்தோனேசியா, மலேசியா போன்ற நாடுகளிலிருந்து ஆற்று மணலை இறக்குமதி செய்து பயன்படுத்தலாம் என்று கூறினார். 300 மீட்டர் தூரத்திற்குள் குடியிருப்பு பகுதி, புராதான சின்னங்கள், உயர் மின் கோபுரம், குடிநீர் ஆதாரங்கள் அமைந்துள்ளதால் தி/ள். டி. குமரேஷ் ரஃப் ஸ்டோன் & கிராவல் குவாரி அனுமதி வழங்கக்கூடாது என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

11. திரு. லட்சுமணன் – மிடாப்பாடி கிராமம்

கல்குவாரியினால் சுற்றுச்சூழல் பாதிப்படைகிறது என்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் எல்லா குவாரிகளுக்கும் தடை விதிக்கக் வேண்டி பலமுறை புகார் அளித்துள்ளேன் எனவும், அப்புகார் மனு மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், திண்டுக்கல்

மாவட்டத்திலுள்ள அனைத்து குவாரிகளையும் தடை செய்து வனத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரவேண்டும் என்று கூறினார்.

12. திரு. ஜெகதீஸ்குமார் – வயலூர் கிராமம்

திண்டுக்கல் மாவட்டம் மழை அதிகம் பெய்யாது எனவும், விவசாயம் அதிகளவு இல்லை எனவும், தொழிற்துறைச் சார்ந்த பகுதியாக இருப்பதால் கட்டுமானப் பொருட்களின் தேவை அதிகமாக இருக்கிறது எனவும், இக்குவாரியில் அதிகப்படியான ஆட்கள் வேலை செய்வதால் இக்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

13. திரு. மகேந்திரன் – வயலூர் கிராமம்

தான் இக்குவாரியில் கடந்த 10 வருடங்களாக பணியாற்றுவதாகவும், 30 குடும்பங்கள் இக்குவாரியை நம்பி வாழ்கின்றனர் ஆகவே, இக்குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

14. திரு. செல்வராஜ்

இப்பகுதியானது பாறைகள் உள்ள பகுதி எனவும், இது தரிசு நிலம் எனவும் ஆகையால் இங்கு குவாரி செயல்பட அனுமதி வழங்கலாம் எனவும், கட்டுமானப்பொருட்களின் தேவை அதிகமாகவும், குவாரிகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் இக்குவாரிக்கு அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

15. திரு. மணிகண்டன் – வயலூர் கிராமம்

தான் இக்குவாரியில் கடந்த 10 வருடங்களாக பணியாற்றுவதாகவும், பல குடும்பங்கள் இக்குவாரியை நம்பி வாழ்கின்றனர் ஆகவே, இக்குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

இவ்வாறு கருத்துக்கேட்புக் கூட்டம் நடைபெற்று நன்றியுரையுடன் தேசியகீதம் பாடி முடிவடைந்தது.

| | |
|---|---|
| மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்<br>திண்டுக்கல். | கோட்டாட்சியர்,<br>கொடைக்கானல்,<br>திண்டுக்கல். |